**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 355/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 1 |
| நாள் | : | 23.07.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜிலானி | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | பக்ருதீன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**8, 12ம் எதிரிகள் ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. A3 produced by VC. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது பேரம்பாக்கத்தில் உள்ள டீ கடையில் வேலை செய்து வருகிறேன். பேரம்பாக்கம் எம்.ஜி.ஆர் நகரில் வசித்து வருகிறேன். நான் ராஜ்குமார் பாதிரியாருக்கு சொந்தமான சர்ச்சில் பின்பக்கமுள்ள ரூமில் தங்கியிருக்கிறேன். எங்கள் ரூமிற்கு அருகில் வட இந்தியாவை சேர்ந்த சிலபேர் தங்கியிருந்து வேலை செய்கிறார்கள். மாதம் தேதி வருடம் ஞாபகமில்லை. இரவு சுமார் 10.30 மணிக்கு பாத்ரூம் சென்றபோது இரவு நேரம் என்பதால் ஏதோ சத்தம் கேட்டது நான் ஓடிவந்து பார்த்தபோது யாரோ என்னை அடித்தார்கள் நான் கீழே விழுந்து விட்டேன். யார் என்று தெரியவில்லை. மேலும் இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 14.12.2021ம் தேதி இரவு 10.30 மணியளவில் எங்கள் வீட்டு பக்கத்தில் பாத்ரூம் சென்ற போது எங்கள் வீட்டு பக்கத்தில் தங்கியிருந்து வேலை செய்யும் வட மாநிலத்தின் இளைஞர்களை யாரோ அடித்து அதனால் அவர்கள் அழும் சத்தம்

கேட்டது நான் ஓடி சென்று பார்த்தேன் என்றும், அப்போது ஊர் பேர் விலாசம் தெரியாத நான்கு நபர்கள் என்னை கட்டையால் சரமாரியாக அடித்தார்கள் என்றும் எனக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மயங்கி விழுந்து விட்டேன் என்றும், கண் விழித்து பார்த்தபோது பேரம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்தேன் என்றும், எனக்கு முதல் சிகிச்சை அளித்தார்கள் என்றும், எனது ரூம் அருகில் வசிக்கும் வட மாநில இளைஞர்கள் இரத்த வெள்ளத்தில் இருந்தார்கள் என்றும் அவர்களுக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும் அவர்களுக்கும் முதல் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு என்னையும் என்னுடன் இருந்த வட மாநில இளைஞர்களையும் அனுப்பி வைத்தார்கள் என்றும், நான் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தேன் என்றும் என்னுடன் வந்த ஒரு நபர் அப்துல்ஹசீம் என்பவரை சென்னை அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தார்கள் என்றும் அவர் காலை 7 மணிக்கு இறந்துவிட்டதாக சிகிச்சையில் இருந்தவர்கள் கூறினார்கள் என்றும் போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.07.23 17:40:32 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 355/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 2 |
| நாள் | : | 23.07.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மல்கியா ராஜ்குமார் | ஜாதி | : | |
| தந்தை–கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**<u>முதல் விசாரணை</u> :**

நான் பேரம்பாக்கம் எம்.ஜி.ஆர் நகரில் வசித்து வருகிறேன். பேரம்பாக்கம் அரசு மருத்துவமனை தெரு எம்.ஜி.ஆர் நகரில் உள்ள சர்ச்சில் பாதிரியாராக உள்ளேன். எங்கள் சர்ச்சிற்கு பின்பக்கம் உள்ள ரூம்களில் வட மாநிலத்தை சேர்ந்தவர்கள் தங்கியிருந்து தனியார் நிறுவனங்களில் ஒப்பந்த தொழிலாளியாக வேலை செய்து வருகிறார்கள். நான் தினமும் இரவு 12 மணிக்கு ஜெபம் செய்து விட்டு உறங்க செல்வேன். அதே போல கடந்த 14.12.2021 இரவு சுமார் 10.30 மணியளவில் சண்டை போடும் சத்தம் கேட்டது. அப்போது யாரோ அந்த வட மாநிலத்தவரை அடித்து விட்டு ஓடி விட்டதாக கூறினார்கள். அவர்கள் யார் என்று தெரியாது. யார் யாரை அடித்தார்கள் என்றும் தெரியாது அடிப்பட்டவர்களையும் தெரியாது மேலும் இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது போலிசார எழுதிக் கொண்டார்கள்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 14.12.2021ம் தேதி இரவு 10.30 மணியளவில் எங்கள் சர்ச் ரூமில்

தங்கியிருந்த பேரம்பாக்கத்தை சேர்ந்த ஜிலானி அவர்களின் உறவினர்கள் இருந்தார்கள் என்றும் அப்போது நான் சர்ச்சில ஜெபம் செய்து கொண்டிருந்தேன் என்றும், அப்போது ரூமிலிருந்து ஏதோ சத்தம் கேட்டது என்றும், அப்போது வட மாநிய இளைஞர்கள் அடிக்கடி சத்தம் போடுவார்கள் என்று இருந்துவிட்டேன் என்றும் பின்னர் அலறல் சத்தம் அதிகமாக கேட்டது என்னவென்று வெளியே சென்று பார்த்தேன் என்றும், அப்போது அடையாளம் தெரியாத நபர்கள் பத்து பேரிலிருந்து 12 நபர்கள் வரை இருசக்கர வாகனத்தில் வந்தார்கள் என்றும் கையில் உருட்டுகட்டையுடன் இருந்தார்கள் என்றும் அவர்கள் ரூமிலிருந்த வட மாநில இளைஞர்கள் 4 பேர் மற்றும் பேரம்பாக்கத்தை சேர்ந்த ஜிலானி ஆகியேர் அடிபட்டு இரத்த வெள்ளத்தில் இருந்தார்கள் என்றும் அவர்களின் தலையிலும் உடம்பிலும் காயம் இருந்தது என்றும், அவர்களை நான் அருகிலிருந்த பேரம்பாக்கம் சுகாதார நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும் பின்னர் அவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள் என்றும், காலை 7 மணியளவில் வட மாநில இளைஞர் அப்துல்ஹசிம் இறந்துவிட்டதாக போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.07.23 17:40:53 +0530

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 355/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 3 |
| நாள் | : | 23.07.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுல்தான் | ஜாதி | : | |
| தந்தை–கணவர் பெயர் | : | பஷீர் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**முதல் விசாரணை :**

நான் தற்போது பேரம்பாக்கத்தில் அரசு மருத்துவமனை தெரு எம்.ஜி.ஆர் நகரில் ராஜ்குமார் பாதிரியாருக்கு சொந்தமான சர்ச்சில் பின்பக்கமுள்ள ரூமில் தங்கியிருக்கிறேன். எங்கள் ரூமிற்கு அருகில் வட இந்தியாவை சேர்ந்த சிலபேர் தங்கியிருந்து வேலை செய்கிறார்கள். மாதம் தேதி வருடம் ஞாபகமில்லை. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் இன்று நீதிமன்றத்திற்கு வரசொன்னார்கள் மற்றபடி இந்த வழக்கை பற்றி எதுவுமே தெரியாது, போலிசாரே எழுதி கொண்டார்கள்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 14.12.2021ம் தேதி இரவு 10.30 மணியளவில் எங்கள் சர்ச் ரூமில் தங்கியிருந்த வட மாநில இளைஞர்களான ஜாபீர் உசேன் பக்ரூல் இஸ்லாம். அப்துல் ஹசீம் மற்றும் அப்துல் ராவ் ஆகியோர் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டு கொண்டிருந்தோம் என்றும் அப்போது அங்கு வந்த ஊர் பெயர் தெரியாத 7 நபர்கள் ரூமிற்கு நுழைந்து கட்டையால் சரமாரியாக அவர்களை அடித்தார்கள் என்றும் அதில் ஜாபீர் உசேன் என்பருக்கு இடதுபக்க நெற்றியில் இரத்தகாயம் ஏற்பட்டது என்றும்,

அப்துல் ஹசீம் என்பருக்கு தலையில் காயம் ஏற்பட்டது பக்ரூல் இஸ்லாம் என்பருக்கு வலது காலிலும் தலையிலும் காயம் ஏற்பட்டது என்றும் அப்போது ஜாபீர் உசேன் அவர்களை தள்ளிவிட்டு ஓடிவிட்டார் என்றும் அருகில் வசித்த ஜிலானி என்பவர் அங்கு வரும் போது 4 நபர்கள் கட்டையால் தலையில் அடித்தார்கள் என்றும், அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது என்றும் பின்னர் வந்தவர்கள் 4 இருசக்கர வாகனங்களில் தப்பி சென்று விட்டார்கள் என்றும் அப்துல் ஹசீம் தலை முழுவதும் இரத்த காயத்தில் மயங்கி விழுந்த நிலையில் நாங்கள் உடனே பேரம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சேர்த்து முதலுதவி சிகிச்சை அளித்து 108 ஆம்புலன்1 மூலம் திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும் அதில் அப்துல் ஹசீம்க்கு தலையில் இர்த்த காயம் ஏற்பட்டு மய்ங்கிய நிலையில் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸில் கொண்டு சென்றார்கள் என்றும், இன்று காலை 7 மணிக்கு அவர் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது என்றும் போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM Digitally signed by S TASNEEM Date: 2026.07.23 17:41:00 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.